திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்:திரு.ச.செல்வபாலாஜி.பி.இ.,

ந.க.எண்.3892/2025/எப்1 **நாள். 20.11.2025**

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு – திருவண்ணாமலை மாநகராட்சி – மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட – மேலத்திக்கான் ஊராட்சி – வருவாய் கிராமம் – புல எண்.69/1A1B, 69/1A2, 69/2, 69/3A, 69/3B, 69/4A, 69/4B – ல் (1.60 3/4 ஏக்கர்) பரப்பளவு கொண்ட தனியார் நிலத்தை மனை குடியிருப்பு மனைகளாக அபிவிருத்தி செய்தல் இறுதி ஒப்புதல் அளித்தல் – தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.141 (வீட்டு வசதித்துறை), நாள்.16.07.2022
2. உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு, திருவண்ணாமலை அவர்களின் தொழில் நுட்ப அனுமதி கடிதம் ந.க.எண். VJ1OARWD/2025/TCP, நாள்: 11.09.2025 .
3. இணை சார் பதிவாளர், திருவண்ணாமலை அவர்களின் அலுவலக ஆவண எண். 3917/2025.
4. திருமதி.R.கவிதா மற்றும் நால்வர், திருவண்ணாமலை என்பவரின் விண்ணப்பம் நாள்.03.10.2025.
5. திருவண்ணாமலை மாநகராட்சி கருவூல பற்றுச் சீட்டு எண்.040/TM6/1/25-26/0010793 நாள்.29.10.2025.

=======

உத்தரவு:

திருவண்ணாமல மாநகராட்சிப் பகுதியுடன் புதியதாக இணைக்கப்பட்ட – மேலத்திக்கான் ஊராட்சி – வருவாய் கிராமம் – புல எண்.69/1A1B, 69/1A2, 69/2, 69/3A, 69/3B, 69/4A, 69/4B – ல் (1.60 3/4 ஏக்கர்) பரப்பளவு கொண்ட தனியார் நிலத்தை மனைகளாக அபிவிருத்தி செய்யும் நோக்கில், பார்வை 2-ல் காணும் கடிதத்தில், உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு, திருவண்ணாமலை அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெற்று, பார்வை 4-ல் காணும் விண்ணப்பத்தில், திருமதி.R.கவிதா மற்றும் நால்வர், அவர்கள் இறுதி ஒப்புதல் கோரியுள்ளனர்.

தொடர் நடவடிக்கையாக, பார்வை 5-ல் காணும் இம்மாநகராட்சியில் கருவூலப் பற்றுச் சீட்டு எண் மூலம், மனை அனுமதி கட்டணமாக ரூ.4,70,750/- (நான்கு லட்சத்து ஏழுபத்தாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்)மனைஉரிமையாளரால் செலுத்தப்பட்டுள்ளது. பார்வை 3-ல் காணும் இணை சார்பதிவாளர், திருவண்ணாமலை அவர்களின் அலுவலக ஆவண மூலம், மேற்படி மணைப்பிரிவிற்காக, உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு, திருவண்ணாமலை அவர்களின் தொழில்நுட்ப அனுமதியில் ஒதுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்கள் மாநகராட்சி ஆணையாளருக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, திருவண்ணாமலை மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட – மேலத்திக்கான் ஊராட்சி – வருவாய் கிராமம் – புல எண்.69/1A1B, 69/1A2, 69/2, 69/3A, 69/3B, 69/4A, 69/4B – ல் (1.60 $^{3/4}$ ஏக்கர்) பரப்பளவு கொண்ட தனியார் நிலத்தை குடியிருப்பு மனையாக அபிவிருத்தி செய்யும் பொருட்டு மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவில் 01 முதல் 49 வரை எண்ணிடப்பட்டுள்ள 49 குடியிருப்பு மனைகளுக்கு பார்வை 2–ல் காணும் கடிதத்தில், உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு திருவண்ணாமலை அவர்கள் அளித்துள்ள தொழில்நுட்ப அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் அளித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

ச.செல்வ பாலாஜி.பி.இ.,
(ஓம்) ஆணையாளர்,
திருவண்ணாமலை மாநகராட்சி.

பெறுநர்:–

திருமதி.R.கவிதா மற்றும் நால்வர்
மேலத்திக்கான் கிராமம்,
திருவண்ணாமலை

நகல்:–

1. வட்டாட்சியர், திருவண்ணாமலை (சாலை மற்றும் பொது ஓதுக்கீடு இடங்களை மாநகராட்சி பெயரில் பட்டா மாற்றம் செய்ய ஏதுவாக)
2. இணை சார்பதிவாளர், திருவண்ணாமலை
3. வருவாய் ஆய்வாளர், திருவண்ணாமலை மாநகராட்சி (மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு காலிமனை வரி நிர்ணயம் செய்ய ஏதுவாக)
4. The Chairman, Tamil Nadu Real Estate Regularity Authority, No.1A, CMDA Tower II, 1st Floor, Egmore, Chennai –08

// உண்மை நகல் //

20/11/2025

உதவி நகர திட்டமிடுபவர்
திருவண்ணாமலை மாநகராட்சி

20/11/25